செ.செ. எண் : 799 5/11/09

## பத்திரிக்கைச் செய்தி

தமிழகத்தில் பெரும்பாலான பகுதிகளில் சமையலுக்கு எரிவாயு பயன்படுத்தப்பட்டு வருகிறது. நாளுக்குநாள் எரிவாயு நுகர்வோரின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது. எண்ணெய் நிறுவனங்கள் (ஐ.ஓ.சி., பி.பி.சி., எச்.பி.சி.) தங்களது முகவர்களை அனைத்து பகுதிகளிலும் நியமித்து எரிவாயு விநயோகத்தினை செய்து வருகிறார்கள். சில எரிவாயு நிறுவனங்கள் நுகர்வோருக்கு வாடிக்கையாளருக்கு பதிவு செய்த நாளிலிருந்து பல நாட்கள் கடந்து விநியோகம் செய்வதாகவும், டெலிவரி ஆட்கள் நுகர்வோரிடம் எரிவாயு உருளைக்கான தொகைக்கு அதிகமாக வசூல் செய்வதாகவும், இன்ன பிற சேவைக் குறைப்பாடுகளும் தெரிவிக்கப்பட்டு வருகின்றன. எனவே, எரிவாயு விநியோகத்தில் ஏற்படுகின்ற சேவைக் குறைபாடுகள் குறித்த நுகர்வோர் புகார் தெரிவித்து நிவாரணம் பெற ஏதுவாக நவம்பர் 9ம் தேதி காலை 11.00 மணி முதல் மதியம் 1.30 மணி வரை சென்னை-5, திருவல்லிக்கேணி பிள்ளையார் கோவில் தெரு, கதவிலக்கம் எண்.11 (பழைய எண். 5) (திருவட்டீஸ்வரன் கோவில் அருகில்) அமைந்துள்ள காந்தலட்சுமி கல்யாண மண்டபத்தில் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, இணை ஆணையாளர் திரு. சி. என். மகேஸ்வரன் தலைமையில் குறைதீர் கூட்டம் நடைபெற உள்ளது. இக்குறைதீர் கூட்டத்தில் எண்ணெய் நிதுமக்கள் கலந்து கொண்டு எண்ணெய் நிறுவன உயர் அலுவலர்களிடம் தங்கள் குறைகள் மற்றும் புகாரினை நேரடியாக தெரிவித்து பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.றுவன உயர் அலுவலர்களும், எரிவாயு முகவர்கள் சங்கப் பிரதிநிதிகளும் கலந்து கொள்ள உள்ளனர். எனவே, சென்னை மாநகரம் மற்றும் புறநகர் பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் கலந்து கொண்டு எண்ணெய் நிறுவன உயர் அலுவலர்களிடம் தங்கள் குறைகள் மற்றும் புகாரினை நேரடியாக தெரிவித்து பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஒம்./- க. ராஜாராமன்
ஆணையாளர்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

ஆணையாளருக்காக

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9